உடனடி வெளியீட்டிற்காக

# இலங்கை: பாதுகாப்புப் படைகளினால் மேற்கொள்ளப்படும் "காணாமல்போதல்கள்" ஒரு தேசியப் பிரச்சினை

*சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு செயற்பணியே உடனடித் தேவை*

(நியூ யோர்க், மார்ச் 6, 2008) – இன்று ஒரு தேசியப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கும் பரந்தளவிலான "காணாமல்போதல்களுக்கு" இலங்கை அரசாங்கமே பொறுப்பு என, மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு இன்று வெளியிட்ட புதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது. "காணாமலாக்கப்படுதல்" என்னும் செயற்பாட்டை உடனடியாக நிறுத்துவதோடு அந்நபர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை உடனடியாக வெளிப்படுத்துமாறும், அதன் குற்றவாளிகளை அவற்றுக்கு பொறுப்புச் சொல்ல வைக்குமாறும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பானது அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

2006ம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்கும் (புலிகள் இயக்கம்) இடையே பாரிய அளவிலான மோதல்கள் ஆரம்பித்ததன் பின்னர் பாதுகாப்புப் படையினராலும் அரசாங்கத்திற்கு ஆதரவான ஆயுதக் குழுக்களினாலும் நூற்றுக்கணக்கான தனிநபர்கள் கடத்தப்பட்டுள்ளனர் அல்லது "காணாமல்போயுள்ளனர்," அவர்களில் பெரும்பாலானோர் இறந்துபோய் விட்டனர் என்றே கருதப்படுகின்றது.

**"மீளத் தலைதூக்கும் பயங்கரம்: இலங்கையில் 'காணாமல்போதல்கள்' மற்றும் கடத்தல்களில் அரசாங்கத்தின் பொறுப்பு",** என்னும் 241 பக்கங்களைக் கொண்ட அறிக்கையானது, இலங்கையில் நடந்துள்ள நூற்றுக்கணக்கான சம்பவங்களில் 99 சம்பவங்கள் தொடர்பாகவும், இச் சம்பவங்கள் தொடர்பாக இன்றைய நாள்வரையும் எந்த வகையிலும் திருப்தியளிக்காத அரசாங்கத்தின் பிரதிபலிப்புக்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்துள்ளது. வேண்டுமென்றே பலவந்தமாக நடத்தப்படும் காணாமல்போதல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பணிக் குழுவின் (United Nations Working Group on Enforced and Involuntary Disappearances) கருத்துப்படி, 2006 மற்றும் 2007ம் ஆண்டுகளில் உலகிலேயே நபர்கள் "காணாமல்போன" சம்பவங்கள் மிகக் கூடிய அளவில் இலங்கையிலேயே அறிக்கையிடப்பட்டுள்ளது.

"ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு காலத்தில் மனித உரிமைகள் தொடர்பாக குரல்கொடுப்பதில் மிகப் பிரபலமானவராக இருந்தாலும், தற்போது உலகிலேயே மிக அதிக அளவில் பலாத்காரமாக நடத்தப்படும் காணாமல்போதல்களை மேற்கொள்ளும் குற்றவாளி என்ற நிலைக்குத் தனது அரசாங்கத்தைக் கொண்டு சென்றுள்ளார்," என மனித உரிமைகள் கண்காணிப்புக் குழுவின் ஆசியப் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் எலீன் பியர்சன் (Elaine Pearson) கூறினார் "அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வரையில் இந்தப் பிரச்சினையானது தொடர்ந்து நடைபெறப்போகின்றது என்பதையே, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முடிவுக்கு வந்தமை அர்த்தப்படுத்துகின்றது," எனவும் அவர் மேலும் கூறினார்.

சர்வதேசச் சட்டத்தின்படி, அரசானது ஒரு நபரைக் கைது செய்து அவரைத் தடுத்து வைத்திருப்பதை மறுக்கின்றபோது அல்லது அவர் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார் என்பதை வெளியிட மறுக்கும்போதே, அது பலவந்தமாக நடத்தப்படும் காணாமல்போதல் என்பதை மேற்கொள்ளுகிறது. "காணாமல்போனவர்கள்" பொதுவாகவே சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு சட்டத்துக்கு புறம்பான வகையில் படுகொலை செய்யப்படுவதோடு, அதன் மூலம் அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் பாரிய மனவேதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். காணாமல்போனவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பது

அறியப்படும்வரை, பலாத்காரமாக நடத்தப்படும் காணாமல்போதல்கள் என்பது தொடர்சியாக நிகழ்த்தப்படும் ஒரு மனித உரிமை மீறல் என்றே கொள்ளப்படல் வேண்டும்

மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் ஆவணப்படுத்தப்பட்ட மிகப் பெரும்பாலான சம்பவங்களில் அரசாங்கப் பாதுகாப்புப் படைகளான இராணுவம், கடற் படையினர் மற்றும் பொலீசாருக்கு தொடர்புகள் இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இன்னும் சில சம்பவங்களைப் பொறுத்தவரை, தமது உறவினர்களைத் தடுத்து வைத்திருக்கும் குறிப்பிட்ட இராணுவப் பிரிவு அல்லது குறிப்பிட்ட எந்த இராணுவ முகாமுக்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டனர் என்பதை "காணாமல்போனவர்களின்" உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர். ஏனைய சில சம்பவங்களைப் பொறுத்த வரையில் தமது உறவினர்கள் "காணாமல்போவதற்கு" முன்னர் சீருடை தரித்த பொலீசார், அதிலும் குறிப்பாக குற்றவியல் விசாரனைப் பிரிவைச் (CID) சேர்ந்த அதிகாரிகளால் அவர்கள் கைது செய்யப்பட்டதாக உறவினர்கள் விபரித்துள்ளனர்.

ஐந்து பிள்ளைகளின் தந்தையும் ட்ரக் வண்டிச் சாரதியுமான 40 வயது நிரம்பிய வைரமுத்து வரதராசன் 2007 ஜனவரி 7ம் திகதி, கொழும்பில் தனது வீட்டில் வைத்து கடத்தப்பட்டுள்ளதோடு இன்றுவரை அவரைக் காணவில்லையென அவரது மனைவி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிற்குத் தெரிவித்தார்:

"ஆண்கள் 20 பேர் அடங்கிய ஒரு குழுவினர் – பொலீஸ் சீருடை தரித்த சிலரும், சாதாரண சிவில் உடை தரித்த சிலருமாக எமது வீட்டைச் சுற்றி வளைத்தனர். ஒரு பொலீஸ் அதிகாரி உள்ளே வந்து எமது அடையாள அட்டைகளைக் கேட்டார். அடையாள அட்டையை எடுத்து வருவதற்காக நான் ஒரு அறைக்குள்ளே சென்றேன். நான் அறையை விட்டு வெளியே வந்த பொழுது எனது கணவரையும் அந்த பொலீஸ் அதிகாரியையும் காணவில்லை. நான் வெளியே ஓடிச் சென்றபோது வீதியில் இருட்டான இடத்தில் ஒரு வாகனம் (van) நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்டேன். நான் வீதியால் ஓடிச் சென்றேன், ஆனால் நான் அங்கு போவதற்கிடையில் அந்த வாகனம் புறப்பட்டுச் சென்றுவிட்டது."

இச்சம்பவங்களில் முஸ்லீம்களும் சிங்களவர்களும் குறி வைக்கப்பட்டிருந்தாலும் பெரும்பாலாக பாதிக்கப் பட்டிருப்பவர்கள் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களே. பெரும்பாலான சம்பவங்களில், அந்த நபர்கள் புலிகள் இயக்கத்துடன் தொடர்புள்ளவர்கள் என்கின்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே பாதுகாப்புப் படையினரால் "காணாமால்" ஆக்கப்பட்டுள்ளனர். மதகுருக்கள், கல்வியலாளர்கள், மனிதாபிமான நிவாரண பணியாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களும் குறிவைக்கப்பட்டுள்ளனர்.

அரசாங்கத்துக்கு ஆதரவான தமிழ் ஆயுதக் குழுக்களும் கடத்தல்கள் மற்றும் "காணாமல்போதல்களில்" ஈடுபட்டுள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளனர். குறிப்பாக கருணா குழுவினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரும் (EPDP) – ஒன்றில் சுதந்திரமாகவோ அல்லது பாதுகாப்புப் படையினருடன் கூட்டாக இணைந்தோ செயற்பட்டுள்ளனர்.

நபர்களைக் குறி வைத்து கொல்லுவதே புலிகள் இயக்கத்தின் பிரதான உத்தியாக இருப்பதால், அவ்வியக்கத்தினால் கடத்தப்பட்ட நபர்களின் எண்ணிக்யைானது ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்படுகின்றது. பலாத்காரமாக சிறார்களைப் படையில் சேர்த்தல், அரசியல் படுகொலைகள், சாதாரண சிவில் மக்களைக் குறிவைத்து நடத்தும் குண்டுத் தாக்குதல்கள் உட்பட தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் மக்களின் அடிப்படை சிவில் உரிமைகளை திட்டமிட்ட வகையில் ஒடுக்குதல் போன்ற அப்பட்டமான பல அத்து மீறல்களுக்கு புலிகள் இயக்கத்தினர் பொறுப்பாளிகளாவர்.

நாட்டில் நிலவும் பிரச்சினை தொடர்பாக போதியளவு விசாரணைகளை நடாத்தி குற்றத்துக்குப் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பான விடயத்தில் அரசாங்கமானது மிக மோசமான இயலாமையையே வெளிப்படுத்தியுள்ளது.

கடத்தல்கள் மற்றும் "காணாமல்போதல்களில்" ஈடுபட்டமை தொடர்பாக ஒரு பாதுகாப்புப் படையினர் மீதும்கூட இதுவரை சட்ட சடவடிக்கை எடுக்கப்படவில்லை. சட்டத்துக்குப் புறம்பான வகையில் எழுந்தமானத்தில் நபர்களைக் கைதுசெய்தல் மற்றும் அவர்களின் விபரங்களை வெளியிடாமல் தடுத்து வைத்திருத்தல் போன்றவற்றை செய்யக்கூடிய வகையில் பாதுகாப்புப் படையினருக்கு ஒட்டுமொத்த அதிகாரங்களைக் கொடுத்துள்ள அவசரகாலச் சட்டங்களின் மூலம். அமுல் நடத்தப்படும் காணாமல்போதல்கள் நிகழுவதறகு உகந்த வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவிக்கின்றது.

தண்டனைகளுக்கு உட்படுத்தப்படாத விதத்தில் படையினரும் பொலீசாரும் இந்த "காணாமலாக்கப்படுதல்" என்பதில் ஈடுபடும்வரை, இக் கொடிய குற்றச் செயலானது தொடர்ந்து நடைபெறத்தான் போகின்றது" என பியர்சன் தெரிவித்தார்.

கடத்தல்கள், காணாமல்போதல்கள் உட்பட ஏனைய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கண்காணிப்பதற்கும் விசாரணைகளை மேற்கொள்வதற்குமான பொறுப்புகளுடன் ராஜபக்ஷவின் அரசாங்கம் பல வகையான விசேட பணிக்குழுக்களை அமைத்துள்ளது. ஆனால் அக்குழுகள் எவையுமே உருப்படியான பெறுபேறுகள் எதனையும் வழங்கவில்லை.

தமது சொந்தப் பாதுகாப்புப் படையினரே இந்தப் பிரச்சினையில் ஈடுபட்டிருக்கத் தக்கதாக இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்டத்திலுள்ளவர்கள் தொடர்ச்சியாகவே பிரச்சினையின் தாற்பரியத்தை மிகக் குறைவாகக் கணித்துச் செயற்படுவதும் இப்பிரச்சினை நிலவுவதை மறுப்பதையும் வைத்துப் பார்க்கையில் இப்பேறுபேறுகளற்ற நிலை தொடர்பாக ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை, எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவிக்கின்றது.

"இத்தகைய அத்துமீறல் நடவடிக்கைகள் எந்த விதத்திலும் பொறுத்துக்கொள்ளத் தக்கவையல்ல என்கின்ற மிகத் தெளிவான சமிக்ஞையொன்றை ஜனாதிபதியும் ஏனைய உயர் அதிகாரிகளும் தமது பாதுகாப்பு படையினருக்கு கொடுக்கும் வரையில், இந்த 'காணாமல்போதல்கள்' தொடர்பான பிரச்சினையை கையாழுவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகள் எந்தவித பெறுபேறுகளையும் தரமாட்டாதவையாகவே இருக்கும்," எனவும் பியர்சன் தெரிவித்தார்.

"காணாமல்போதல்களின்" எண்ணிக்கையானது அதிர்ச்சியடையத்தக்க வகையில் அதிகரித்திருப்பது பற்றியும், குற்றவாளிகள் தண்டனைகளுக்கு உட்படுத்தப்படாத நிலை நிலவுவது தொடர்பாகவும் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் காரியாலயம் உட்பட பல ஐ.நா. பணிக் குழுக்களும், இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச பங்காளி நாடுகளும் தமது தீவிர அக்கறையை ஏற்கனவே தெரிவித்திருந்தன. அரசாங்கப் படைகளும் புலிகள் இயக்கத்தினரும் நாடு பூராகவும் மேற்கொள்ளுகின்ற அத்து மீறல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஐ.நா. மனித உரிமைகள் கண்காணிப்புப் பணிக்குழுவொன்றை அமைப்பதற்காக அதிகரித்து வரும் தமது ஆதரவையும் அந்நாடுகள் வெளிப்படுத்தியிருந்தன.

சர்வதேச கண்காணிப்புப் பணிக்குழுவொன்றை அமைப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கம் தெரிவித்திருக்கும் எதிர்ப்பை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கண்டிப்பதோடு, "காணாமல்போதல்கள" தொடர்பான விடயத்தைக் கையாழுவதில் இத்தகைய சர்வதேச முன்முயற்சிகள் வேறுபல நாடுகளில் மிகத் தாக்ககரமான பலாபலன்களைத் தந்துள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. தகுந்த ஆணையும் போதிய வளங்களும் வழங்கப்பட்டால், அரசாங்கமும் ஏனைய பல்வேறு தேசிய செயலணிகளும் நிறைவேற்றத் தவறிய பணியை சர்வதேச கண்காணிப்பு செயலணியால் நிறைவேற்ற முடியும். எந்தவித இடையூறுமின்றி தடுப்புக் காவல் நிலையங்களுக்குச் செல்வதன் மூலம் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களை உறுதிப்படுத்தல்; குறிப்பான ஒவ்வொரு சம்வங்கள் தொடர்பான விபரங்களையும் மோதலில் ஈடுபட்டுள்ள சகல

தரப்பினரிடமிருந்தும் கோருதல்; சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுவதற்கும் குடும்பங்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கும் உதவியாக இருக்கும் வகையில் தேசிய ரீதியான மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சட்டத்தை நிலைநாட்டும் அமைப்புக்களுக்கு உதவுதல்; முறைப்பாடு செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக நம்பத்தகுந்த ஆவணப்படுத்தலை மேற்கொள்ளல் என்பவற்றை அவை நிறைவேற்றலாம்.

"ஐ.நா. கண்காணிப்புப் பணிக்குழுவொன்றை அமைப்பது தொடர்பாக இலங்கை அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவித்திருப்பதானது மனித உரிமைகள் தொடர்பாக அதன் அக்கறையற்ற நிலைமையை மிக மோசமாக வெளிப்படுத்துகிறது," என பியர்சன் தெரிவித்தார். "அரசாங்கம் வீணாகக் காலம் கடத்தும்வரை இன்னும் அதிகமான இலங்கையர்களே அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும்."

இலங்கை அரசாங்கமானது கீழ்வரும் விடயங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கோருகின்றது:

- பலவந்தமாக நடத்தப்படும் காணாமல்போதல்கள் என்னும் நடைமுறையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதோடு, சகல சம்பவங்கள் தொடர்பாகவும் தீவிரமான விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளை அவற்றுக்கு பொறுப்புச் சொல்ல வைத்தல், மற்றும்

- மோதல்களில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினராலும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்களை மீறுகின்ற வகையில் மேற்கொள்ளப்படும் அத்து மீறல்களை கண்காணித்து அறிக்கையிடுவதற்காக சர்வதேச கண்காணிப்பு பணிக்குழுவொன்றை நிறுவுவது தொடர்பாக ஐ.நா.வின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் காரியாலயத்துடன் ஒத்துழைத்தல்,

சர்வதேச கண்காணிப்புப் பணிக் குழுவொன்றை ஏற்றுக் கொள்ளுவது உட்பட, "காணாமல்போதல்கள்" என்னும் செயற்பாட்டை உடனடியாக நிறுத்தி, குற்றவாளிகள் தண்டனைகளிலிருந்து தப்பும் நிலைமையை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பாக அரசாங்கத்தின் முன் முயற்சி அவசியம் என்னும் நிபந்தனையின் அடிப்படையிலேயே, இலங்கைக்கு தமது இராணுவ மற்றும் மனிதாபிமான நோக்கல்லாத (non-humanitarian) உதவிகளைச் தொடர்ந்து செய்தல் வேண்டும் என இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச பக்காளிகளான, குறிப்பாக இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு கோரிக்கை விடுக்கின்றது.

**அறிக்கையிலிருந்து வாக்குமூலங்கள்**

"அவர்கள் தியாகராஜாவை தாக்கத் தொடங்கினார்கள். அவர்கள் அவரது ட சேர்ட்டைக் கழற்றி அவரின் வாய்க்குள் திணித்தார்கள். அயலவர்கள் உதவிக்கு ஓடி வந்தார்கள், ஆனால் அவர்கள் அனைவரையும் அவர்கள் கலைத்துவிட்டார்கள். அவரது மனைவி கத்தினார், அழுதார், ஆனால் அவர்கள் அவரை துப்பாக்கிப் பிடியால் தாக்கினார்கள். அவர் ஒன்பது மாதக் கர்ப்பிணியாக இருந்தார். தியகராஜா தனது வீட்டில் குண்டுகள் வைத்திருந்ததாக அவர்கள் குற்றம் சாட்டினார்கள், வீட்டிற்குள்ளும் வெளியிலும் நிலத்தைக் கிண்டும்படி அவரை நிர்ப்பந்தித்தார்கள். அவர்கள் எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டி வீட்டைச் சோதனையிட்டார்கள். ஆனால் எதனையும் அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. அவரால் நடக்க முடியாத அளவுக்கு மோசமாக அவர்கள் அவரைத் தாக்கினார்கள் - அவரை அவர்கள் தூக்கிக் கொண்டுதான் போகவேண்டியிருந்தது. அவர்கள் அவரை ஒரு மொட்டார் சைக்கிளில் கொண்டு சென்றார்கள்."

- 2007, பெப்ரவரி 20ம் திகதி இரவு யாழ்ப்பாணம், புத்தூர் கிழக்கில் வைத்து "காணாமல்போன" 25 வயதான தியாகராஜா சரண் என்பவரின் உறவினர் ஒருவர்,

"பத்திநாதரும், அன்ரனும் இராணுவத்தினரால் விசாரிக்கப்படுவதை தாம் கண்டதாக ஊர் மக்கள் என்னிடம் கூறினார்கள். இராணுவத்தினர் அவர்களை துப்பாக்கி முனையில் வைத்திருந்தனர். பின்னர் இராணுவத்தினர் அவர்களை 'பவல்' வாகனத்தில் ஏற்றினார்கள். அவர்களின் சைக்கிள்களையும் அந்த வாகனத்தில் ஏற்றினார்கள். ஊர் மக்களை கலைந்து போகும்படி இராணுவத்தினர் கலைத்து விட்டதனால் என்ன நடந்தது என்பதை அவர்களால் அதிகம் பார்க்க முடியவில்லை, ஆனால் அங்கு தாங்கள் கண்டதைப்பற்றி கதைப்பதற்கே இப்போது அவர்கள் அஞ்சுகின்றனர்.

- 27 வயதான பத்திநாதர் பிரசன்னா என்பவருடன் 2007 பெப்ரவரி 17ம் திகதி யாழ்ப்பாணத்தில் "காணாமல்போன" 21 வயதான அன்ரன் பிரதாபனின் உறவினர் ஒருவர்.

"நாங்கள் இராணுவ முகாமுக்குச் (கொடிகாமம்) சென்றபொழுது எனது மருமகனின் சைக்கிள் அங்கு நிறுத்தப் பட்டிருப்பதைக் கண்டோம். இரணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள, முகாமுக்கு அருகிலேயே அது நிறுத்தப்பட்டிருந்தது. நாங்கள் இராணுவத்தினரிடம் கேட்டபொழுது, அவர்கள் தாங்கள் கைது செய்ததை மறுத்து விட்டார்கள், நாங்கள் சைக்கிளைக் கண்டதாக கூறியபொழுது, அவர்கள் ஆத்திரப்பட்டு எங்கள் மீது சத்தம் போட்டார்கள், "உங்களை யார் அங்கே போய் பார்க்கச் சொன்னது?! இனிமேல் இந்த இடத்திற்கு வந்தீர்களானால் நாங்கள் உங்களைச் சுடுவோம்!" சைக்கிளை மீளப் பெற்றுத் தரும்படி நாங்கள் கிராமசேவையாளரிடமும் பொலீசாரிடமும் கேட்டோம், ஆனால் அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை. அதேவேளை, அம்முகாமின் கட்டளை அதிகாரி எங்களிடம் அந்த சைக்கிளைத் திருப்பித் தந்தார். அந்த நபரைக் கைது செய்தவர்கள் தற்போது இந்த முகாமில் இல்லை என அவர் எம்மிடம் கூறினார், எனவே நாங்கள் சைக்கிளை மட்டும் எடுத்துக்கொண்டு திரும்பிப் போகவேண்டியிருந்தது."

- யாழ்ப்பாணம், கச்சாயைச் சேர்ந்த 30 வயதான சங்கர் சாந்திவராசராம் என்பவருடன் சேர்ந்து 2006, ஆகஸ்ட் 16ம் திகதி "காணாமல்போன" 26 வயதான தவரூபன் கணபதிப்பிள்ளை என்பவரின் உறவினர் ஒருவர்.

" சீருடை தரித்த இரு நபர்கள் எமது வீட்டின் வாசல்படிக்கு வந்தார்கள். அவர்கள் ஆயுதங்களை வைத்திருந்தார்கள். இன்னொருவர் இராணுவ டீ சேர்ட்டும் ஜீன்சும் அணிந்திருந்தார். எனது கணவரை எங்கே கொண்டு செல்கிறீர்கள் என நான் அவர்களிடம் கேட்டேன். சிவில் உடையில் இருந்த நபர் எனக்கு பிஸ்டல் ஒன்றைக் காட்டினார் அவரை எங்கே கொண்டு செல்கிறீர்கள் என நான் மீண்டும் கேட்டேன், அவர்கள் மீண்டும் எனக்கு பிஸ்டலைக் காட்டினார்கள். பின்னர் அவர்கள் அவரை வெளியே கொண்டு சென்றார்கள். நான் அவர்களுக்குப் பின்னால் ஓடினேன், அவர்களிடம் இரண்டு வேன்கள் இருந்தன, ஒன்று வெள்ளை நிறம் மற்றது நீல நிறம்."

- 2006 ஆகஸ்ட் 23ம் திகதி கொழும்பில் வைத்து "காணாமல்போன" 21 வயதான இராமகிருஷ்னன் இராதாகிருஷ்னன் என்பவரின் மனைவி.

“மீளத் தலைதூக்கும் பயங்கரம்: இலங்கையில் ‘காணாமல்போதல்கள்’ மற்றும் கடத்தல்களில் அரசாங்கத்தின் பொறுப்பு” என்னும், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் அறிக்கையை பார்வையிடுவதற்கு http://hrw.org/reports/2008/srilanka0308/ என்னும் இணையதள முகவரிக்குச் செல்லவும்.